2002 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேனி மாவட்ட மக்களின் சார்பாக புகழேந்திக்கு நன்றி.*

டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் கடலூர், நீங்கள் விழுப்புரம். உட்காருங்கள்.*

வினா எண் 4, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

4—

மருத்துவர்களுக்குக் குடியிருப்பு

***4442—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, சுவாமிமலையில் இயங்கிவரும் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்குக் குடியிருப்புக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதிக்குட்பட்ட சுவாமிமலை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்குக் குடியிருப்பு கட்டும் திட்டம் தற்சமயம் எதுவும் இல்லை.

திரு. எம். ராம்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுவாமிமலை பேரூராட்சி என்பது மிக அதிகமான மக்கட்தொகை கொண்ட பேரூராட்சி ஆகும். அதோடு மட்டுமல்ல, முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்குகின்ற அந்தப் பகுதி, சுமார் 40 கிராமங்களுக்கும் மேற்பட்ட மக்கள் அந்த மருத்துவமனையிலே சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. அங்கு மருத்துவர்களுக்குக் குடியிருப்பு இல்லாத நிலை இருக்கின்ற காரணத்தினாலே, பணியிலே இருக்கின்ற மருத்துவர்கள்*

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2002 மார்ச் 12

அருகில் உள்ள குடந்தை நகரிலும்; தஞ்சை நகரிலும் சென்று குடியிருக்கின்ற காரணத்தினாலே, மக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அடிப்படை சுகாதார சேவைக்குத்தான் - Primary Health Care இதற்குத்தான் - முக்கியத்துவம் கொடுத்து, முன்னுரிமை கொடுத்து இப்பொழுது கிராமப் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்குத் தரமான சிகிச்சை, அதுவும் குறைவான செலவில் அங்கேயே கிடைக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் அதிக நிதியை ஒதுக்கீடு செய்து நல்ல திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறது. அந்த அடிப்படையில்தான் கிராமப் பகுதிகளில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு அங்கே Operation Theatre, X-Ray போன்ற வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டு தரமான சிகிச்சை அளிப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்றக்கூடிய வகையில் குடியிருப்பு கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முடிந்த அளவிற்கு, அதாவது பிரதான ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அங்கே குடியிருப்பு கட்டிக் கொடுத்து இருக்கிறோம். சுவாமிமலை ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் அது துணை ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்கிறது. இருந்தாலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கிராமப் பகுதிகளில் இருக்கிற துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அங்கேயே கிராமப்புற செவிலியர்கள் தங்கி பணியாற்றக்கூடிய வகையில் இந்த ஆண்டு ஆயிரம் துணை சுகாதார நிலையங்களுக்குக் குடியிருப்பு வசதியோடு கட்டடம் கட்டித் தருவதற்கு 45 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்ற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கம். அப்படி குடியிருப்பு இல்லாத பகுதிகளில், கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு கிராமப்புற அலவன்ஸ் கொடுத்துக் கொண்டு வருகிறோம். மாதம் 500 ரூபாய்

2002 மார்ச் 12]

அவர்களுக்குக் கொடுத்து வருகிறோம். எனவே, அந்த வகையிலே டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்றுகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். எங்களுடைய அரசின் சார்பில் டாக்டர்களுக்கு வேண்டுகோளாக வைப்பது, முடிந்த அளவிற்கு டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்ற வேண்டுமென்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. கி. பாரிமோகன், திரு. வெ. கோவிந்தராஜ், திரு. ஜி.கே. மணி, திரு. பெ. பழனியப்பன், திரு. கா.பூ. முனுசாமி மற்றும் திரு. ஐ. கணேசன், கூட்டாகச் சேர்ந்து கேட்டிருக்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றிய கேள்வி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

5—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***527—திரு. கி. பாரிமோகன், திரு. வெ. கோவிந்தராஜ், திரு. ஜி.கே. மணி, திரு. பெ. பழனியப்பன், திரு. கா.பூ. முனுசாமி, திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) மேற்கண்ட குடிநீர்த் திட்டப் பணிகள் எந்நிலையில் உள்ளன?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.